முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 87/2023

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 2 |
| பெயர் | .. | பெருமாள் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | பொன்னுசாமி |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| வட்டம் | .. | |

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

வாதி ஜெயராம் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் சுமார் 4.5 கி.மீ தூரம் இருக்கும். நான் வரவேண்டுமென்றால் பேருந்திலோ அல்லது இருசக்கர வாகனத்திலோ தான் வரவேண்டும். மார்ச் 31 2020ல் வாதியிடம் பிரதிவாதி கடன் வாங்கினார். பணம் வாங்கும்போது சரவணன் உடன்இருந்தாரா என்றால் இருந்தார். எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.1,00,000/- கொடுத்தார். பணம் கொடுக்கும்போது சுப்பிரமணி, பூதேரி புல்லவாக்கம் மற்றும் செய்யாரில் உள்ள வடிவேல் இருந்தார்கள். மேற்படி ஆவணத்தை எழுதியவர் யார் என்று தெரியாது, அவருடைய கையெழுத்தும் எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் உள்ள பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார் அந்த வகையில் பழக்கம். செய்யாரிலிருந்து பூதேரி புல்லவாக்கம் சுமார் 15 கி.மீ இருக்கும் பேருந்து ஏறிதான் வரவேண்டும் என்றால் சரிதான். 23.03.2020 கொரோனா காலத்தில் போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் அந்த நேரத்தில் பேருந்து வந்து வழக்கு

ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டதாக சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. அதேபோல சொன்னதேதியில் ரொக்கமாக பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றும் பிரதிவாதி எந்த கடனும் பெறவில்லை என்றும் வழக்கிற்காக பணம் பெற்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.